பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 25உ (10—8—67) வியாழன் ★ வெளியூர்: ஆடி 26உ (11—8—67) வெள்ளி [இதழ்: 48

இதுவரையில்

ரூ. 16,22,266

சென்னை துயர் தணிப்பு நிதிக்கு வசூல்

சென்னை, ஆக. 9—

சென்னைத் தீ விபத்துத் துயர் தணிப்பு நிதிக்காக முதலமைச்சர் அண்ணா அவர்கள் திரட்டி வரும் நிதிக்கு ஆகஸ்டு 7-ம்நாள் முடிய ரூ. 16,22,266 சேர்ந்துள்ளது.

இந்தியாவுக்குத் தேசியமொழி ஏது?

வார்னிஷ் விற்பதற்கு மாநில முழுவதிலும் தடை

தமிழக அரசு நடவடிக்கை

திருச்சி, ஆக. 9—

தமிழ் நாடு முழுவதிலும் வார்னிஷ், ஆல்ககால் போன்ற ஸ்பிரிட் சம்பந்தப்பட்ட பொருள்களை எல்லாம் உடனே கைப்பற்ற முதலமைச்சர் அண்ணா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டுக்காக அண்ணா இங்கு வந்துள்ளது தெரிந்ததே.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உடனே தங்கள் மாவட்டங்களுக்கு இதுபற்றிக் கட்டளையிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். வார்னிஷ் ஆல்ககால் போன்ற பொருட்கள் உடனே கைப்பற்றப்படும் எனத் தெரிகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வாலாசாபாத்திலும் வார்னிஷ் குடித்ததால் பலர் மரணமடைந்ததை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தபோது, அவர் மிகவும் வேதனையடைந்தார்.

வார்னிஷ் போன்ற ஸ்பிரிட் சம்பந்தமுள்ள பொருள்களை காவல் துறையினர் உடனடியாகக் கைப்பற்றி சோதனைக்கு அனுப்புவர்.

வார்னிஷ் உற்பத்தி, விற்பனைக் கட்டுப்பாட்டை கடுமையாக்குவதற்கான நடவடிக்கைகளைத் தமிழக அரசு ஆய்வு செய்து வருவதாகத் தெரிகிறது.

மு. கருணாநிதி உறுதிமொழி

திருச்சி, ஆக. 9—

முசிறியையும் — குளித்தலையையும் இணைக்கக் காவிரி ஆறுமீது உடனடியாக ஒரு பாலம் கட்டுவதற்குத் தம்மாலான முயற்சியைச் செய்வதாக அமைச்சர் கருணாநிதி, முசிறி ஊராட்சி வரவேற்புக்கு நன்றி தெரிவிக்கையில் கூறினார்.

மற்றொரு ஆள் கைது!

குடிசைக்குத் தீ வைத்தவர்

சென்னை, ஆக. 10—

சென்னையில் அடுத்தடுத்து ஏற்பட்ட தீ விபத்துக்கள் தொடர்பாக இப்போது மற்றொரு நபரைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

ஏற்கனவே பத்மநாபன், அரிராம், எட்டி என்ற மூன்று பேர் (காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்) இத்தொடர்பில் கைதாகியுள்ளனர்.

இப்போது நான்காவதாகக் கைதான ஆளின் பெயர் வேணு; வயது 45.

மயிலாப்பூரில் 75 குடிசைகட்குத் தீ வைத்தவர் இவர் என்று கூறப்படுகிறது.

வார்னிஷ் குடித்த 65 பேர் வாலாஜாபாத்தில் பலி

மற்றும் 300 பேர் மருத்துவமனையில் அனுமதி

சென்னையில் இதுவரை 53 பேர் இறந்தனர்

சென்னை, ஆக. 10—

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த வாலாசாபாத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வார்னிஷ் குடித்ததால் 65 பேர் இறந்ததாகத் தெரிகிறது.

வார்னிஷ் குடித்ததால் பாதிக்கப்பட்ட 90 பேர் செங்கற்பட்டு மருத்துவமனையிலும், 138 பேர் காஞ்சிபுரம் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர்.

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்களில் செங்கற்பட்டில் 7 பேர்களும், காஞ்சிபுரத்தில் 18 பேர்களும் இறந்தனர்.

வாலாசாபாத்தில் சிகிச்சைபெறுவதற்கு முன்பே 40 பேர் இறந்துவிட்டார்கள்.

இன்னும் மருத்துவமனைக்கு பலர் வந்தவண்ணமுள்ளனர்.

வாலாசாபாத் பகுதியில் உள்ள மொத்தம் 34 ஊர்களைச் சேர்ந்த 300 பேர்கள் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது.

செங்கற்பட்டு மருத்துவமனையிலுள்ள மருத்துவர்களுக்கு உதவிசெய்வதற்காகச் சென்னையிலிருந்தும் மருத்துவர்கள் சென்றிருக்கின்றனர்.

சென்னையில்:

ஏற்கனவே சென்னை நகரில் வார்னிஷ் குடித்ததால் பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை 53 பேர் இறந்திருக்கின்றனர்; அவர்களில் 8 பேர் பெண்கள்.

மற்றும் 67 பேர் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கருணாநிதி பார்த்தார்

சென்னை, ஆக. 9—

பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், திருச்சியிலிருந்து சென்னை திரும்பியவுடன், நேரே இராயப்பேட்டை மருத்துவமனைக்குச் சென்று, வார்னிஷ் குடித்து உயிருக்குப் போராடி வருபவர்களைக் கண்டு வேதனை அடைந்தார்; அவர்களுக்கு ஆறுதல் கூறினார்; அவர்களுக்காகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளைக் கவனித்தார்.

அமைச்சருடன் போலீசுத் துறைத் தலைவர் எப். வி. அருள், கமிஷனர் எம். சிங்காரவேலு ஆகியோரும் சென்றனர்.

தலைமை மருத்துவரும். மருத்துவக் கல்லூரி நெறியாளரும், அமைச்சரிடம் நிலைமையை விளக்கினர்.

மருத்துவமனையிலிருந்து திரும்புமுன் அமைச்சர், போலீசுத் துறை அதிகாரிகளுடன் சில நிமிடங்கள் தனியே பேசினார்.

இணைப்பு மொழி என்பதே தேவையில்லை

ஆங்கிலத்தை அகற்ற இந்தியால் இயலாது

நாடாளுமன்ற மேலவையில் தென்னக உறுப்பினர் எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 9—

"இந்தியாவுக்குத் 'தேசீய மொழி' என்ற ஒன்று இல்லை. தமிழ் வட்டார மொழி என்றால், இந்தியும் ஒரு வட்டார மொழிதான்; இணைப்பு மொழி என்பது இந்தியாவுக்குத் தேவையில்லை; மும்மொழிக் கொள்கையை நான் உறுதியாக எதிர்க்கிறேன்"

என்று, நாடாளுமன்ற மேலவையில், இடது கம்யூனிஸ்டு உறுப்பினரான திரு. நிரேன் கோஷ் கூறினார்.

காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த திருமதி சியாம் குமாரி கான் பேசுகையில் சுட்டிக் காட்டியதாவது:-

"ஆங்கிலம் எப்போதும் இந்தியாவின் தேசிய மொழியாக முடியாது; ஆனால் அதேநேரத்தில், யார்மீதும் எந்த ஒரு மொழியையும் திணிக்கமுடியாது. எனவே, கட்டாயமில்லாமல் மனப்பூர்வமாக ஒரு மொழியை ஏற்கச் செய்தால்தான் வெற்றிபெற முடியும்."

மும்மொழிக் கொள்கையை ஆதரித்துப் பேசிய காங்கிரசு உறுப்பினரான திருமதி அம்மண்ண ராஜா வற்புறுத்தியதாவது:—

"இந்தியால் ஆங்கிலத்தை அகற்றிவிட முடியாது.

"ஆங்கிலத்தின்மீது எவ்விதக் குரோதமும் கொள்ளக்கூடாது. அதனை இந்தியாவின் தேசிய மொழிகளில் ஒன்றாக ஏற்க வேண்டும்."

"நாடாளுமன்றக் கல்விக் குழுவில் போதிய அளவில் தென்னக உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை; மூன்றே மூன்று தென்னக நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் அதில் இடம் பெற்றிருந்தனர்" என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

திரு. ஜி. இராமச்சந்திரன் பேசுகையில், சில பகுதிகளில் தாய் மொழியும் இந்தியும் இருக்க வேண்டும் என்றும், மற்றும் சில பகுதிகளில் தாய் மொழியும் ஆங்கிலமும் இருக்கவேண்டும் என்றும் கல்விக் குழுவினர் அறிக்கையில் பரிந்துரைத்திருப்பதைக் கண்டித்தார்.

"இதனால் நாடு, 'இந்தி இந்தியா' —'ஆங்கில இந்தியா' என்ற இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து விடும்" என்றார் அவர்!

"தென்னாட்டவரைப் பார்த்து இந்தி கற்றுக்கொள்ளும்படியோ, அல்லது வடநாட்டவரைப் பார்த்து ஆங்கிலம் கற்கும்படியோ கூறத் துணிவு பெறவேண்டும்; இந்த இரண்டில் ஒன்றைச் செய்யுங்கள்" என்றார் அவர்.

திரு. பி. டி. பார்த்தசாரதி (காங்.) பேசுகையில், 'இந்தியைத் திணிப்பது, நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் சிதைத்துவிடும்' என்று எச்சரித்தார்.

"இந்தியை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளக் குறைந்தது ஒரு 30 ஆண்டுக் காலமாவது அனுமதிக்க வேண்டும்" என்றார்.

திரு. கங்கா சரண் சின்கா (சுயே), மும்மொழிக் கொள்கையை ஆதரித்தார்; 'தென்னாட்டில் இக்கொள்கை செயல்படுத்தப்படவில்லை' என்றும் குறைபட்டுக் கொண்டார்.

திருமதி அம்மண்ண ராஜா, இதனை மறுத்துரைக்கையில், 'தென்னாட்டில் தமிழ்நாடு மட்டும்தான் இக்கொள்கையைச் செயல்படுத்தவில்லை' என்றார்.

கல்விக் கமிஷன் மற்றும் நாடாளுமன்றக் கல்விக் குழு ஆகியவற்றின் அறிக்கைகள்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு இவர்கள் பேசினர்.

'நாத்திகம்' ஆசிரியருக்கு 1 ஆண்டுக் கடுங்காவல்-- ரூ. 2,000 அபராதம்

கழகப் பொருளாளர் மு. கருணாநிதி தொடர்ந்த வழக்கில் தீர்ப்பு

சென்னை, ஆக. 10—

'நாத்திகம்' என்னும் பத்திரிகைமீது கழகப் பொருளாளர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தொடர்ந்திருந்த அவதூறு வழக்கில் இன்று தீர்ப்பளிக்கப்பட்டது.

அந்தப் பத்திரிகையின் ஆசிரியரான இராமசாமி என்பவருக்கு ஓராண்டுக் கடுங்காவல் தண்டனையும் ரூ. 2,000 அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் மூன்று மாதக் கடுங்காவலும் விதித்தார். சென்னைத் தலைமை மாகாண மாஜிஸ்திரேட் திரு. வி. பலராமையா அவர்கள்.

இவ்வழக்கில் பொருளாளர் மு. கருணாநிதி சார்பில் வழக்கறிஞர் வேலூர் டி. நாராயணன் வாதாடினார்.

சிவசேனை வெறியாட்டம்

காவல் துறையினர் மீது கல்லெறிந்து தாக்கினர்

பம்பாய், ஆக. 9—

கலவரத்தில் ஈடுபட்ட ஒரு கும்பலைக் கைது செய்வதற்காக சாந்தா குரூஸ் விமான நிலையம் நோக்கிச் சென்ற போலீசுக் குழுவினர் மீது சிவசேனையைச் சேர்ந்த 200 பேர் சூழ்ந்து கொண்டு, சிவசேனை ஆதரவு முழக்கங்களை முழங்கியவாறு கல்லெறிந்து தாக்கியிருக்கின்றனர்.

மீண்டும் அந்தப் போலீசார் திரும்பி வந்துகொண்டிருந்தபோது, 'சிவசேனை வாழ்க' என்ற முழக்கத்துடன் பல திசைகளிலிருந்தும் கல்லெறிந்திருக்கின்றனர். இதனால் இரண்டு போலீசுக்காரர்கள் காயமடைந்தனர்.

பர்மா அகதிகளுக்கு இழப்பு ஈடு கிடைக்குமா?

தொண்டித் துறைமுகம் புதுப்பிக்கப்படுமா?

மக்களவையில் தா. கிருஷ்ணன் கேள்வி

புதுடில்லி, ஆக. 8—

"பர்மாவில் தங்கள் உடைமைகளை இழந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்துள்ளவர்கள், இன்னும் தங்களுக்குரிய இழப்பு ஈட்டுத் தொகையைப் பெறவில்லை என்பது உண்மைதான்; இந்தப் பிரச்சினை குறித்துப் பர்மா அரசுடன் முழு அளவில் விவாதிக்கப்பட்டு வருகிறது, நடத்தப்பட்டுவரும் விவாதங்களின் விவரத்தை வெளியிடுவது பொதுநலனுக்கு உகந்ததல்ல"

என்று அகதிகள் மறுவாழ்வளிப்புத் துறையமைச்சர் திரு. எல். என். மிஸ்ரா, நாடாளுமன்ற மக்களவையில், கழக உறுப்பினர் தா, கிருட்னன் (சிவகங்கை) கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

இராமேசுவரம்—தலைமன்னர் கப்பல் போக்குவரத்து

இராமேசுவரம் தீவுக்கும்—இலங்கையில் உள்ள தலைமன்னருக்குமிடையே எத்தனைமுறை கப்பல்கள் சென்று வருகின்றன? இராமேசுவரத்தில் எல்லா வசதிகளுடனும் கூடிய நிரந்தரத் துறைமுகம் கட்டும் எண்ணம் அரசுக்கு இருப்பது உண்மையா? இல்லை' எனில், தனுஷ்கோடித் துறைமுகத்தைப் புதுப்பிக்கவோ, சுதந்தரம் பெறுவதற்குமுன் முறைப்படியான துறைமுகமாக இயங்கியதும் இலங்கைக்கு மிக அருகில் உள்ளதுமான தொண்டித் துறைமுகத்தை மீண்டும் ஏற்படுத்தவோ திட்டம் உண்டா?"

என்று தோழர் தா. கிருட்டினன் கேட்டார்.

அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ் இதற்குப் பதிலளித்ததாவது:-

"தென்னக இரயில்வேயிடமிருந்து இந்தியக் கப்பல் கார்ப்பரேஷனல் எடுத்துக்கொள்ளப்பட்ட டி. எஸ். எஸ். இர்வின்' என்னும் கப்பல், வாரத்திற்கு இருமுறை சென்று வருகிறது.

"தமிழக அரசு, இராமேசுவரம் அருகில் உள்ள ரெட்ட தாழை, என்னுமிடத்தில் போதுமான வசதிகளுடன் கூடிய புதிய துறைமுகம் ஒன்றை உருவாககி வருகிறது."

திருச்சி—தஞ்சை மாவட்டங்களுக்குப் பாசன நீர்

கட்டளை—புள்ளம்பாடிக் கால்வாய்கள் திறப்பு

சென்னை, ஆக. 7—

புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய் ஆகியவற்றை ஆகஸ்டு முதல் நாளிலிருந்து டிசம்பர் 15-ஆம் நாள்வரை பாசனத்துக்குத் திறந்துவிட அரசு முடிவு செய்திருக்கிறது.

இக்கால்வாய்களின் முழு நீளமும் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படும்; இதனல் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் இவற்றின் கீழுள்ள ஆயக்கட்டு நிலங்கள் பயனடையும்.

குறுகிய காலப் பயிருக்குத்தான் குடியானவர்களுக்குப் பாசனம் விடப்படும்.

காவிரி ஆற்றில் கிடைக்கும் அதிகப்படியான நீர், மேட்டூர் அணையின் நீர் மட்ட வாய்ப்பு ஆகியவற்றை பொறுத்தே அமையும்.

டிசம்பர் 15-ம் நாளுக்குப் பின் தண்ணீர் விடப்படமாட்டாது.

'இந்திய அரசியலின் இருள்மேகம் விலகுகிறது'

'தமிழகத்தில் அமைதி நிலவுகிறது'

டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் கருத்துரை

கடலூர், ஆக. 8—

இங்கு நடந்த ரோட்டரி சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) ஆட்சி மொழி பற்றிக் குறிப்பிட்டதாவது:—

"எந்த ஒரு மொழியையும் மக்கள் மீது கட்டாயமாகத் திணிக்கக்கூடாது. எந்த ஒரு நாட்டு மக்கள் மீதும் அவர்கள் விரும்பாத ஒரு மொழியை கட்டாயமாகத் திணிக்கக் கூடாது. அதுவே அந்த நாட்டின் ஒற்றுமைக்குக் கேடு விளைவிக்கும்!

"நமது அரசியல் சட்டத்தில் 'ஆட்சி மொழி' என்ற சொல் தான் காணப்படுகிறது. இதை மக்களிடம் விட்டுவிட்டால் காலப்போக்கில் நிலைமை சீரடைந்துவிடும்.

'இதுபற்றி நாட்டில் ஒருசிலர் எண்ணுவதுபோல் உடனடியாக மனமாற்றம் ஏற்படும் என்பது நடைபெருத ஒன்ருகும்.

"இந்திய அரசியல் வானில் இருள் மேகம் விலகுகிறது! பிற மாநிலங்களைவிடத் தமிழகம் மிகவும் அமைதியாக உள்ளது!

"இங்கிருப்பவர்களை, கடந்த காலத்தில் தம் விருப்பப்படி ஆட்டிவைக்கும் வேகு தூரத்தில் இருந்த சக்தி, தற்போது இல்லை; இதுவும் திருப்திகரமானதுதான்!"

கிருஷ்ணமேனனின் எதிர்காலம்

தனிக்குழு அமைக்க முயற்சி

புதுடில்லி, ஆக. 8—

வட பம்பாய்த் தொகுதியில் நடைபெற்ற இரு தேர்தல்களிலும் தோல்வியடைந்த பின்னர், தமது அரசியல் நடவடிக்கைகளைச் சுருக்கிக் கொண்டிருந்த திரு. வி. கே. கிருஷ்ண மேனன், மீண்டும் அரசியலில் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்திருக்கிருர்.

காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகிப் பொதுத்தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட முடிவு செய்வதற்கு முன்னர் தமக்கிருந்த செல்வாக்கையும் மதிப்பையும் திரும்பவும் மீட்பதற்கு கிருஷ்ண மேனன், தீவிரமாக முனைந்துள்ளார். இதற்காக அவர் அடிக்கடி போட்டிக் காங்கிரசுத் தலைவர்களுடனும், எதிர்க் கட்சி உறுப்பினர்களுடனும் ஆலோசனை நடத்திவருகிருர். சுயேச்சை எம்.பி.-க்கள், அவருக்கு ஆதரவாக இருக்கிருர்கள்; திரு. மேனனுக்கு ஆதரவான குழுவை உருவாக்க முயலுகிருர்கள்.

சமீபகாலமாக பொதுக்கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு, 'அரபு நாடுகளின்மீது இஸ்ரேல் ஆக்கிரமிப்பு' —'வியட்நாமில் அமைதி' ஆகியவை குறித்து திரு. கிருஷண மேனன் பேசிவருகிருர்! அகில இந்திய அமைதிக் குழு, ஆப்ரோ—ஆசியன் ஒற்றுமை மாநாடு ஆகிய நிறுவனங்களின் சார்பாக இக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இந்த நிறுவனங்களின் முதுகெலும்பாக திரு. மேனன் விளங்குகிருர்.

பஞ்சாபிலும், அரியானுவிலும் அவர் விரைவில் சுற்றுப்பயணம் செய்து பொதுக்கூட்டங்களில் பேசுவார் என்று தெரிகிறது.

திரு. மேனன் மீண்டும் காங்கிரசில் சேருவதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்பதற்குப் பதில் கூற அவர்மறுத்துவிட்டார்; வேறு கட்சியில் சேரும் வாய்ப்பும் இல்லை.

'மகப்பேற்று விடுமுறை இல்லை என்பதுமடத்தனமான நடவடிக்கை'

மத்திய அரசின் சுற்றறிக்கைக்கு ஆளுங் கட்சியினரே எதிர்ப்பு

நாடாளுமன்ற மேலவையில் துணையமைச்சர் திணறல்

புதுடில்லி, ஆக. 8—

"மூன்று குழந்தைகள் அல்லது அதற்கு அதிகமான குழந்தைகள் உள்ள மத்திய அரசின் பெண் ஊழியர்களுக்கு 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து மகப்பேற்றுக்கால விடுமுறை கொடுக்கப்படமாட்டாது"

என்று அமைச்சகம் சுற்றறிக்கை ஒன்று அனுப்பியுள்ளது. மத்திய அரசில் தொழில்துறை அல்லாத பிரிவுகளிலுள்ள பெண்கள் தொடர்பான சுற்றறிக்கை இது.

இது தொடர்பாக நாடாளுமன்ற மேலவையில் எழுந்த எதிர்ப்புக்களுக்கு பதிலளித்த நலத்துறைத் துணை அமைச்சர் பி.எஸ். மூர்த்தி, 'இது, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு உதவியாக இருக்கக் கூடிய நடவடிக்கை' என்று கூறினர்.

உடனே, அவையில் எல்லாத் தரப்பினரிடமிருந்தும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன; சிலர், 'மடத்தனமான — சட்டவிரோதமான — அர்த்தமில்லாத சுற்றறிக்கை இது' என்றெல்லாம் கூறினர்.

நாடாளுமன்ற காங்கிரசுக் கட்சி செயலாளர்களில் ஒருவரான சந்திரசேகர், 'இந்த அர்த்தமில்லாத—மூடத்தனமான உத்தரவை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்' என வற்புறுத்தினர்.

அமைச்சர் பி. எஸ். மூர்த்தி, 'அது மடத்தனமானதா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது' என்று கூறியதும், 'பொதுமக்களின் கருத்தைத் தெரிந்து கொள்வது எப்படி என்பதை அமைச்சர் தெரிந்துகொள்ள வேண்டும்' என்று, திரு. சந்திரசேகர் கூறினர்.

சுற்றறிக்கையைக் கண்டித்து ஆத்திரத்துடன் பேசிய ச. சோ. கட்சி உறுப்பினர் முரகரி குறிப்பிட்டதாவது:—

"விடுமுறை இல்லையென்ருல், கர்ப்பிணிகள், அலுவலகத்திலேயே பிள்ளைபெற வேண்டுமென்று எதிர்பார்க்கிருர்களா?"

காங்கிரசுக் கட்சி உறுப்பினர் திருமதி யசோதா ரெட்டி குறிப்பிட்டதாவது:—

"இந்த நடவடிக்கையை, கருத்தடைச் சட்டமாகக் கருதுவது விந்தையாக இருக்கிறது. பெண் ஊழியர் ஏற்கனவே கருவுற்றிருக்கிருர்; அவருக்கு மகப்பேற்றுக் கால விடுமுறையை மறுப்பதால் குழந்தை பிறக்காமல் நின்றுவிடுமா என்று கேட்கிறேன்."

போர் இழப்பீடு

பாதிக்குமேல் கொடுத்துவிட்டது ஜப்பான்!

டோக்கியோ, ஆக. 8—

தென்கிழக்கு ஆசியாவிலுள்ள நாடுகளுக்குத் தரவேண்டிய போர் இழப்பீட்டுத் தொகையில் 52.6 சதவிகிதத்தை, ஜப்பான், கொடுத்து முடித்துவிட்டது.

ஜப்பான், கொடுக்க வேண்டிய மொத்தத் தொகை ரூ. 1,115 கோடியாகும்; இதில் ஜூலை 31-ம் நாள் வரையில் ரூ. 586.35 கோடி செலுத்திவிட்டது.

தமிழக அரசின் உணவுப் பெருக்கத் திட்டம்

'மத்திய அரசு நிதியுதவ வேண்டும்'

நாடாளுமன்றத்தில் எஸ். கே. சம்பந்தம் வற்புறுத்தல்

புதுடில்லி, ஆக. 8—

நாடாளுமன்றத்தில் உணவுநிலை குறித்து நடந்த விவாதத்தில் கலந்துகொண்ட கழக உறுப்பினர் எஸ். கே. சம்பந்தம் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கத் தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தரிசு நிலங்களை விளை நிலங்கள் ஆக்கவும், ஒருபோகம் விளையும் நிலத்தில் இருபோகம் விளைவிக்கச் செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

"தமிழ்நாட்டு அரசு வகுத்துள்ள திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், உணவு உற்பத்தியில் தமிழ்நாடு உபரி மாநிலமாகிவிடும்; ஆகவே, இதற்கு மத்திய அரசு நிதி உதவி செய்ய வேண்டும்."

தேவையில் பாதியைத் தர இயலவில்லையாம்

மத்திய அமைச்சரின் அவலக் குரல்!

புதுடில்லி, ஆக. 7—

"இந்தியக் கிராம மக்களின் கடன் சுமை ரூ. 3,000 கோடி அளவுக்கு இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

"எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்ற இயலவில்லை; அவைகளின் தேவை ரூ. 800 கோடிமுதல் ரூ. 900 கோடி வரை இருக்கிறது; ஆனல், கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 400 கோடிதான் வழங்க முடிகிறது"

என்று மத்திய கூட்டுறவு அமைச்சர் குருபாதசாமி, நாடாளுமன்ற மேலவையில் கூறினர்.

வழக்குமன்றத்தில் வட்டார மொழி

சட்டங்களை மொழி பெயர்க்க நடவடிக்கை

புதுடில்லி, ஆக. 8—

"வழக்குமன்றங்களில் வட்டார மொழிகளையே பயன்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், மத்திய சட்டங்கள் அந்தந்த மாநில ஆட்சி மொழி (சட்டமன்ற) கமிஷனல் மொழிபெயர்க்கப்படுகிறது"

என்று நாடாளுமன்ற மக்களவையில் சட்ட அமைச்சர் திரு. பி. கோவிந்த மேனன் தெரிவித்தார்.

ஆங்கிலத்தை அகற்றிவிட காலவரை வேண்டுமாம்!

மத்திய அமைச்சரவையில் இந்தி ஆதரவாளர்களின் துடிப்பு

புதுடில்லி, ஆக. 9—

இன்னும் ஐந்தாண்டுக் காலத்துக்குள் பல்கலைக்கழகக் கல்வி மட்டம் வரை வட்டார மொழியைப் பயிற்று மொழியாக்கும் கொள்கை அடிப்படையிலான நகல் தீர்மானத்தை மத்திய அமைச்சரவை ஆய்ந்ததாகத் தெரிகிறது.

கல்வியமைச்சர் டாக்டர் திரிகுண சென் கருத்துப்படி, 'ஐந்தாண்டுக்காலம்' என வரையறுக்கப்பட்டுள்ள கொள்கை பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டபோதிலும், இதுபற்றி இறுதியாக முடிவெடுப்பதை அந்தந்த மாநில அரசுகளுக்கே விட்டுவிடப்படும் என்று தெரிகிறது.

"வட்டார மொழிகள் மூலம் ஆங்கிலம் அகற்றப்படுவதற்கான காலம் வரையறுக்கப்பட வேண்டும்" என்றே பெரும்பாலான அமைச்சர்கள் விரும்புகிருர்களாம். இதற்காக வேறு வகையில் கடுமையான முயற்சி எதுவும் எடுக்கப்பட மாட்டாது என்று தெரிகிறது.

அதேநேரத்தில், இதைச் செயல்படுத்துவதற்குரிய முன்னுயத்தங்களைச் செய்ய மேலும் கூடுதலான காலம் தேவை எனச் சில மாநிலங்கள் கோரலாம் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

வெள்ளைப் பணத்துக்கு சமமாகக் கறுப்புப் பணம்!

ரூ. 3,000 கோடி இருப்பதாகத் தகவல்

புதுடில்லி, ஆக. 8—

கடந்த 1967 ஜூன் மாதக் கணக்குப்படி, நாட்டில் புழக்கத்தில் இருந்த கரன்சி நோட்டுக்

(4-ம் பக்கம் பார்க்க)

மூடிக் கிடக்கும் பஞ்சாலைகளைத் திறக்கும் முயற்சி

கோவை மாவட்டத் தொழிற்சங்கங்கள் கவுன்சில் தீர்மானம்

கோவை மாவட்ட அனைத்துத் தொழிற்சங்கக் கவுன்சிலின் செயற்குழுக் கூட்டம் தோழர் ஜோசப் தலைமையில் 6—8—67 காலை 11-மணியளவில் நடைபெற்றது; கூட்டத்தில் தோழர்கள் காட்டூர் கோபால் (பொதுச்செயலாளர்), எம். பூபதி எம்.எல்.ஏ. (துணைச்செயலாளர்), டி. சொக்கலிங்கம் (பொருளாளர்), ஏ. சுப்பிரமணியம், டி. ஆறுமுகம், டி. பாலன், கே. ஜே. ஜோசப், சு. மோகன்தாசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதுபோது, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

"கடந்த பல மாதங்களாகவும் ஆண்டுக்கணக்கிலும், கோவைப் பகுதியில் மூடப்பட்ட பஞ்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்களது உச்சக்கட்ட நெருக்கடி நிலைமையையும், கோவை மாவட்ட அனைத்துத் தொழிற்சங்கக் கவுன்சிலுக்குட்பட்ட சில தொழிற்சங்கங்கள் எடுத்துள்ள பொது வேலைநிறுத்த முனைப்பு நடவடிக்கைகளையும் கணக்கிலெடுத்து, இன்றுள்ள அவசர அவசிய நிலைமையினையொட்டி கோவை மாவட்ட அனைத்துத் தொழிற்சங்கக் கவுன்சிலின் நிர்வாகிகள் உடனடியாகச் சென்னை சென்று தமிழக முதலமைச்சர்—தொழிலமைச்சர் — தொழிலாளர் அமைச்சர் ஆகியவர்களைச் சந்தித்து உடனடித் தீர்வு காண முயலுவதென்று இத்தொழிற்சங்கக் கவுன்சில் முடிவு செய்கிறது.

"கோவை கணபதி டெக்ஸ்டூல் தலைமைத் தொழிற்சாலையும், மற்றுமுள்ள நான்கு கிளைத் தொழிற்சாலைகளும் கடந்த 1—8—67 முதல் மூடப்பட்டதால் 5,000 தொழிலாளர்கள் படுகிற அவதியையும், தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய சம்பளப் பாக்கி—இதர இனங்களில் வரவேண்டிய தொகை—தொடர்ந்து டெக்ஸ்டூல் தொழிற்சாலை தொய்வின்றி நடக்கவேண்டுவது ஆகிய அவசிய அவசரமான பிரச்சினையையும், இதனையொட்டி சர்வ சங்கக் கூட்டுக் குழுவின் இன்றையத் தொடக்கக் கூட்ட நடவடிக்கைகளையும் கணக்கிலெடுத்து, மாவட்டத் தொழிற்சங்கக் கவுன்சில் பரிசீலித்துவருகிறது."

தமிழ்நாடு மின் கழகக் கணக்காயர் சங்கக் கோரிக்கை நாள் கொண்டாடியதுபற்றிக் குறிப்பிட்டும், அவர்களது அறப்போராட்டத்திற்கு நல்லாதரவினை வழங்கவேண்டுமென்றும் தோழர் மோகன்தாசு கேட்டுக்கொண்டார். செயற்குழுவில் அவர்களது அறப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துப் பலரும் கருத்துக்களை வழங்கினார்கள்.

தொழிற்சங்கக் கவுன்சில் சார்பில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தை 3—9—67-ல் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

பொதுச்செயலாளர் நன்றி கூறியபின்னர் கூட்டம் முடிந்தது.

நெல்லை மாவட்ட பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

25—7—67 அன்று நடந்த மேற்படி சங்கத்தில் 809 உறுப்பினர்கள் கூடிய பேரவைக் கூட்டத்தில், கடந்த 7 ஆண்டுகளாகத் தொழிற் சங்கப்பணியில் ஈடுபட்டு உழைத்து வருகின்ற தோழர் சிட்டிபாபு (பொதுச்செயலாளர்) அவர்களை இப்பேரவை பாராட்டுவதுடன், அவரது வாழ்க்கைச் செலவுக்கு மாதச் சம்பளமாக ரூ. 100 கொடுப்பதென ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது; மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவை டெக்ஸ்டூல் கம்பெனி கதவடைப்பு

தொழிற் சங்கப் பிரதிநிதிகள் முடிவு

6—8—67-ல் கோவை டெக்ஸ்டூல் கம்பெனியில் உள்ள அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கூடிக் கீழ்க்கண்டவாறு ஏகமனதாக முடிவு செய்தனர்:—

கோவை டெக்ஸ்டூல் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு லேஆப் சம்பளம் கொடுக்க மறுத்தது; ஜூன், ஜூலை ஆகிய மாதங்களுக்கு வேலை செய்த சம்பளத்தைக்கூடக் கொடுக்க மறுத்தது: லே—ஆப், இடைக்காலச் சம்பள உயர்வு போன்ற இனங்களில் பல இலட்சக்கணக்கான ரூபாய்களைத் தொழிலாளர்களுக்கு தராமல் இருப்பது; திடீரெனக் கதவடைப்புச் செய்தது—ஆகிய காரணங்களால், 5,000 தொழிலாளர்களும் அவதிக்கு ஆளாக்கப்பட்டுள்ளதையொட்டித் தமிழக முதலமைச்சர் — தொழிலமைச்சர் — தொழிலாளர் நல அமைச்சர் ஆகியவர்களை உடனடியாக டெக்ஸ்டூல் தொழிலாளர்கள் சம்பந்தமான அனைத்துச் சங்கப் பிரதிநிதிகளும் நேரில் சென்று சந்தித்து தகக பரிகாரம் கிடைத்திட வழி வகை காணுவது என்று இக்கூட்டம் ஏகமனதாகத் தீர்மானிக்கிறது.

சென்னை மாநகர சைக்கிள் ரிக்ஷா

தொழிலாளர்கள் கோரிக்கைகள்

27—6—67 அன்று கூடிய சென்னை மாநகர சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் சங்கப் பேரவையில், சைக்கிள் ரிக்ஷாவில் இருவரை ஏற்றிச் செல்ல அனுமதிகோரித் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுவது என்றும், மாநகரில் பொருத்தப்பட்டுள்ள போக்குவரத்துக் கட்டுப்பாடு மின் விளக்குகள் இருக்கின்ற சாலைகளிலும் சைக்கிள் ரிக்ஷாக்கள் செல்ல அனுமதி அளிக்க வேண்டுமென்றும், சைக்கிள் ரிக்ஷாக்களில் நிரந்தரமாக இருவரை ஏற்றிச் செல்ல அனுமதி கோருவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

மேலும், காவல்துறையினர் ரிக்ஷாத் தொழிலாளர்கள் மீது அவதூருக வழக்குகள் போடாமலும், அச்சுறுத்தாமலும் இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

குடந்தையில் டாக்சிகள் ஊர்வலம்

குடந்தை பஸ் ஸ்டாண்டில் டாக்சி ஸ்டாண்டுக்காக, 29-4-66ந் தேதிய நகர்மன்றத் தீர்மானத்தை அமுல்படுத்தக் கோரி டாக்சிகள் ஊர்வலமாகச் சென்று, நகர் மன்றத் தலைவர்—துணைத் தலைவர்—ஆணையர் ஆகியோரிடம் மனுக் கொடுத்துவிட்டு ஊர்வலமாக வந்து நகர் மன்றத்தில் நிறுத்தி, எல்லா நகர் மன்ற உறுப்பினர்களுக்கும் மனுக் கொடுக்கப்பட்டது.

ஏற்கனவே நகர் மன்றத்துக்குச் சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்டிக்கொண்டவர்களில் செல்வாக்குள்ளவர்களின் கட்டிடத்தின் கீற்றை மட்டும் பிரித்துவிட்டு, சாதாரணமானவர்களின் கட்டிடங்கள் மட்டும் இடித்துத் தள்ளப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செந்தாரப்பட்டி கூட்டுறவு நாணயச் சங்கத் தேர்தல்

செந்தாரப்பட்டி பலநோக்குக் கூட்டுறவு நாணயச் சங்க நிர்வாகிகள், தேர்தல், 6—8—67-ல் நடைபெற்றது. கழக வேட்பாளர்களான வெ. செல்லமுத்து (ஊராட்சித் தலைவர்), வெ. மாணிக்கம் ஆகிய இருவரும் காங்கிரசு வேட்பாளர்களான எஸ். ஆர். இனிய குட்டி (எ) பெரியதம்பி உடையார், டி. துரைசாமி படையாச்சி ஆகிய இருவரும் போட்டியிட்டதில், கழக வேட்பாளர் இருவரும் சுமார் 381 வாக்குகள் வித்தியாசத்தில்வெற்றி பெற்றனர்.

உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர்-இளங்கவிஞர்கட்கு வாய்ப்பு

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர் வெளியீட்டுக் குழுத் தலைவர் மாண்புமிகு மா. முத்துச்சாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) அவர்கள் அறிவிப்பதாவது:—

"இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் 1968-ம் ஆண்டு சனவரித் திங்களில் நடைபெறவிருப்பதையொட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் விருப்பத்திற்கிணங்க, இளங் கவிஞர்களுக்கான கவிதைப் போட்டித் திட்டம் ஒன்றை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

"'புகாரில் ஒரு நாள்' என்ற தலைப்பில், வரலாற்றுச் சிறப்புப் பெற்ற பூம்புகார் பற்றி 100 வரிகளுக்கு மேற்படாமல் கவிதைகள் புனைந்து, இளங்கவிஞர்களால் அனுப்பப்பட வேண்டும்.

வரப்பெற்ற கவிதைகளில் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்படும் கவிதைக்குப் பேரறிஞர்அண்ணா அவர்களின் முதற்பரிசு வழங்கப்படும்.

பூம்புகாரின் சிறப்பு அம்சங்கள் பற்றிக் கவிதைகள் புனையப்பட வேண்டும்.

இக்கவிதைகள் எல்லாம், 'தனி அலுவலர், உலகத் தமிழ் மாநாட்டு அலுவலகம், சவுத்ரி காலனி, சென்னை-34' என்ற முகவரிக்கு, 1967 செப்டம்பர் 30-ம் நாளுக்குள், நல்ல முறையில் எழுதப்பட்டு — கவி புனைந்தவரின் தெளிவான முகவரியுடன் அனுப்பப்பட வேண்டும்.

பரிசு பெற்ற கவிதை மாநாட்டுச் சிறப்பு மலரில் வெளியிடப்படும்.

பூம்புகார் பற்றிய தகவல்கள்

சென்னையில் கண்காட்சி — கருத்தரங்கு

தமிழகத்தின் தொன்மையான நகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பை யாவரும் நன்கு அறிவதற்காக, தமிழக அரசின் தொல்பொருள்துறை ஒரு சிறப்புக் கண்காட்சியையும், கருத்தரங்கையும் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இதையொட்டி, பள்ளி — கல்லூரி மாணவர்களுக்கு முறையே ஒப்புவித்தல், பேச்சுப் போட்டிகளும் நடக்கவிருக்கின்றன.

புகாரின் நகர அமைப்பு—பழந் தமிழ் இலக்கியங்களில் அங்கர் பற்றிய குறிப்புக்கள் — அங்கு அண்மையில் நடந்த அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பொருள்கள்—மற்றும் புகைப் படங்கள் கண்காட்சியில் இடம் பெறும்.

கருத்தரங்கில் புகார் பற்றி அறிஞர்கள் பலரின் சொற்பொழிவுகள் இடம் பெறுகின்றன.

ஆகஸ்டு மாதம் 14-ம் நாள் மாலை 4 மணிக்கு தமிழகக் கல்வி அமைச்சரின் தலைமையில், பொதுப்பணி அமைச்சர் கண்காட்சியைத் துவக்கிவைப்பார்.

உள்ளாட்சித் துறை அமைச்சர், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குவார்.

ஆகஸ்டு 15-ம் நாள் காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரையில் கருத்தரங்கு நடைபெறும்.

அன்று மாலை 5 மணிக்கு திரு. சா. கணேசன் தலைமையில், திரு. ம. பொ. சி. சிறப்புரையாற்றுவார்.

இடம்:—60/10, எட்வர்டு எலியட்ஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4.

கோவை மாவட்ட தி. ப. தொ. மு. சங்கம்

கோவை மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க—சரோஜா ஆலை துணைக் குழு நிர்வாகிகள் தேர்தல், 19—7—67-ல், சி. ஏ. மாரியப்பன் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: ரங்கசாமி; செயலாளர்: வெங்கிடாசலம்; துணைச் செயலாளர்: சவெளரியார்; பொருளாளர்: சுப்பையன்; மாவட்டப் பிரதிநிதி: வேலுசாமி.

தாராபுரம் கூட்டுறவு நூற்பாலை துணைக் குழு

தாராபுரம் கூட்டுறவு நூற்பு ஆலையில், கோவை மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துணைக் குழு நிர்வாகிகள் தேர்தல், காட்டூர் கோபால் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: பி. வேலுசாமி; செயலாளர்: வி. கதிர்வேலு; துணைச் செயலாளர்: டி. சின்னத்தம்பி; பொருளாளர்: கே. சி. கிருஷ்ணசாமி; மாவட்டப் பிரதிநிதி: முத்து மாணிக்கம்; செயற்குழு உறுப்பினர்கள்: ஆர். பழனிச்சாமி, எம். இலட்சுமணசாமி, கே. கே. காளியப்பன், சி. டி. குப்புசாமி, சாமிக்கண்ணு, சோமு.

மற்றொரு தேர்தல் வருமா?

காங்கிரசு கட்சி யோசிக்கிறதாம்

புதுடில்லி, ஆக. 8—

காங்கிரசு அமைச்சரவைகளைக் கவிழ்த்துவிட்டுக் காங்கிரசுக்காரர்கள் எதிர்க் கட்சியில் சேருவதும், மாநிலங்களில் காங்கிரசு அல்லாத அமைச்சரவைகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும், இந்திய அரசியலில் புதிய நிலைமையை தோற்றுவித்துள்ளது.

எனவே, 'நாட்டில் இடைத் தேர்தல் நடத்தலாமா?' என்ற யோசனையை காங்கிரசுத் தலைவர்கள் ஆலோசனை நடத்திவருகிறார்களாம்!

மாநில சட்டமன்றத்துக்கும், நாடாளுமன்றத்திற்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதைவிட, தனித்தனியே தேர்தல் நடத்தலாமா என்பது குறித்துத் தலைமை அமைச்சர், மற்ற தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியதில், 'பல்வேறு மாநிலங்களில் பல்வேறு சமயங்களில் தேர்தல் நடத்துவது நல்லது' என்று காங்கிரசுத் தலைவர்கள் கருதுவது தெரியவந்தது.

இது குறித்து கொள்கை முடிவினை மேற்கொள்வதற்காக, செப்டம்பர் முதல் வாரத்தில் காங்கிரசு மேலிடம் மீண்டும் கூடி ஆராயுமாம்!

சரிவைத்தடுத்து நிறுத்தக் காங்கிரசு மேலிடத்தின் 'உபாயம்'!

அமைச்சரவைகளை விரிவாக்க அனுமதி

மத்தியப் பிரதேச காங்கிரசு அமைச்சரவையின் வீழ்ச்சியினல் அதிர்ச்சியுற்றிருக்கும் காங்கிரசு மேலிடம், பல மாநிலங்களில் அமைச்சரவைகளை விரிவுபடுத்த அனுமதிக்கத் தீர்மானித்துவிட்டது.

மைசூர், ஆந்திரம், குசராத் மாநில அமைச்சர்களுக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

இராஜஸ்தான் முதலமைச்சர், தம் அமைச்சரவையை விரிவுபடுத்தப் போவதாக ஏற்கனவே அறிவித்துவிட்டார்.

★

குசராத் மாநிலத்திலும் காங்கிரசு ஆட்சிக்குத் 'தலைவலி'

காலை வாரிவிடக் காங்கிரசுக்காரர்களே காத்திருக்கின்றனர்!

இராஜ்கோட், ஆக. 9—

குசராத் சட்டமன்றத்திலும் காங்கிரசு உறுப்பினர்கள் கட்சி மாறும் அபாயம் உருவாகிவருகிறது!

சௌராஷ்டிரா பல்கலைக் கழகத்தின் தலைமையகத்தை பவநகரில் ஏற்படுத்த வேண்டும் என்று கோரி, பவநகர் மாவட்டக் காங்கிரசுக்காரர்கள் பலர் கிளர்ச்சி செய்துவருவது தெரிந்ததே!

மக்கள்சபையிலுள்ள பவநகர் காங்கிரசு உறுப்பினர் பிரசன்ன வதன் மேத்தா, சுயேச்சை உறுப்பினராகச் செயல்பட்டு வருகிறார்.

குசராத் சட்டமன்றத்தில் காங்கிரசு அமைச்சரவைக்கு அதிகப்படியாக 10 இடங்களே இருக்கின்றன.

பவநகர் மாவட்டக் காங்கிரசு உறுப்பினர்கள் 'போர்க் கொடி' பிடித்துக்கொண்டிருக்க — சில காங்கிரசு [illegible] கட்சி மாறலாம் என்ற ஆபத்து உருவாகியுள்ளது!

இந்நிலையில், பவநகர் காங்கிரசு எம்.எல்.ஏ.-க்களைச் சமாதானப் படுத்தும் முயற்சியில் குசராத் காங்கிரசு இறங்கியுள்ளது.

ஒரு காங்கிரசுக்காரர் கட்சி மாறினர்!

ஆமதாபாத், ஆக. 9—

குசராத் சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர் ஜாப்புபாய் பட்டேல் என்பவர் கட்சி மாறி எதிர்க் கட்சியில் அமர்ந்தார். இவர் ஜாம்நகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

இப்போது குசராத் சட்டமன்றத்தில் காங்கிரசுக் கட்சியின் பலம் 87 ஆகக் குறைந்தது. மொத்தம் உள்ள இடங்கள் 168.

படி அரிசித் திட்டம்!

விரிவாக்குவது பற்றி உணவமைச்சர் விளக்கம்

திருச்சி, ஆக. 8—

"தமிழகத்தில் குடும்பக் கார்டு முறை நடைமுறையிலுள்ள பகுதிகளில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டத்தை எப்போது செயல்படுத்துவது என்று அரசு இதுவரை எந்த முடிவும் செய்யவில்லை; அநேகமாக இத்திட்டம் இவ்வாண்டு டிசம்பர் 31-ம் நாளுக்குள் குடும்பக் கார்டு பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், செய்தியாளர்களிடம் கூறினர்.

முன்பே அறிவித்தபடி, சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆகஸ்டு 15-ம் நாள்—இந்திய விடுதலை நாளன்று படி அரிசித் திட்டம் நடைமுறைக்கு வரும்.

இத்திட்டத்தை, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் தலைமையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கிவைப்பார்கள்.

20 ஆண்டாக பற்றுக்குறை மாநிலமாக வைத்திருந்த காங்கிரசாரே கேளீர்!

இந்த ஆண்டுமுதல் தமிழகம் உபரி மாநிலமாகப் போவதைப் பாரீர்!

இதைவிடச் சாதனை வேறென்றும் வேண்டுமா?

எதிர்க் கட்சிக் குதர்க்கவாதிகட்கு அண்ணு தரும் பதில்

திருச்சி, ஆக. 10—

"இவ்வாண்டு அக்டோபர் திங்கள் அறுவடைக்குப்பின் 8 இலட்சம் டன்னுக்குமேல் கூடுதலான அரிசி கிடைக்கும்; பற்றுக்குறை மாநிலமாக இருந்துவந்த இந்த மாநிலத்தை உபரி மாநிலமாக ஆக்கியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைகளில் ஒன்ருகும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் தொட்டியத்தில் ஆக. 7-ம் நாள் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்கள்.

"'தி. மு. கழக ஆட்சி என்ன சாதித்துவிட்டது?' என்று கேட்கும் காங்கிரசுக்காரர்களுக்கு இதைவிட வேறு என்ன பதில் வேண்டும்?" என்று அண்ணு அவர்கள் கேட்டார்கள்.

உணவு விளைச்சலைப் பெருக்குவதில் தி. மு. க. ஆட்சி காட்டி வரும் அக்கறையை ஆளுநரே பாராட்டியிருப்பதை அண்ணு அவர்கள் சுட்டிக்காட்டினர். அவர் மேலும் பேசியதாவது:—

"இந்த அரசுக்கு இயற்கையும் துணை செய்கிறது. தி. மு. கழகம் பதவியேற்றபோது, மேட்டூர்த் தேக்கத்தில் 30 அடி தண்ணீர்தான் இருந்தது; இப்போது 100 அடிக்குமேல் ஏறிவிட்டது. இனிச் சம்பா பாசனத்துக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாது.

மாநிலத்தின் சிறிய பாசனத் திட்டங்களுக்கு மத்திய அரசும் [illegible] நிதி ஒதுக்கும் என்று [illegible]க்கிறேன்.

உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு, உழவாகளை எல்லாவகையிலும் உற்சாகப்படுத்த வேண்டும் என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. பூச்சிக்கொல்லி மருந்துக்கான மானியத்தை அரசு உயர்த்தியுள்ளது.

கொள்முதலின்போது உணவுத் தானியங்களைக் கொண்டுவருவதற்கு ஆகும் சில்லறைச் செலவைக் குறைக்க அரசு விரும்புகிறது.

படி அரிசித் திட்டத்தை கூடிய விரைவில் மற்றப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த ஆவல்கொண்டிருக்கிறேம்.

காங்கிரசுக் கட்சியின் அதிகார ஏகபோகம் மலையேறிவிட்டது! இனி அதை அவர்கள் மீண்டும் பெறமுடியாது!

அரசியல் கட்சியாகத் தேர்தலில் ஈடுபட்டு மூன்றே பொதுத்தேர்தல்களில் ஆளுங்கட்சியாக மாறிய கட்சி தி. மு. கழகம் தான். இதைப்போல் உலகில் வேறு எங்கும், எந்தக் கட்சியும் இல்லை! இந்த அளவுக்கு நமது கழகத்தின்மீது பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கை வீண் போகாது; நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து நல்லாட்சி நடத்தும் என்று உறுதி கூறிக் கொள்கிறேன்.

தமிழகத்தில் கடந்த சூலை 23-ம் நாள் நடத்தப்பட்ட எழுச்சி நாள் நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது. சேலம் உருக்காலை இன்னும் பரிசீலனையில் இருப்பதாக உருக்குத்துறை அமைச்சர் சில நாட்களுக்கு முன்புகூடச் சொல்லியிருப்பது அதற்கான அறிகுறியாகும்.

நூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் விரைவில் முழு அளவில் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது; 'நிறைவேற்ற வேண்டும்' என்று மத்திய அரசைத் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருப்போம்."

வெள்ளைப் பணத்துக்கு...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

களின் மதிப்பு ரூ. 3233.87 கோடியாகும்.

நாட்டில் நடமாடும் கறுப்புப் பணமும் ஏறத்தாழ ரூ. 3,000 கோடியாகும் என மதிப்பிடப் பட்டிருக்கிறது.

நாணயங்களைப்போல், ஒரு ரூபாய் நோட்டினையும் மத்திய நிதித்துறை அச்சிட்டு வழங்குகிறது. ரிசர்வ் பாங்கி, மற்ற ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டுப் புழக்கத்தில் விடுகிறது.

கழக ஆட்சியின் சாதனை காணக் காத்திருங்கள்!

திருச்சி, ஆக. 8—

"பெரியதோர் ஆலமரம்போல் காங்கிரசு வளர்ந்திருந்தது; இப்போது பல மாநிலங்களில் அதன் வேர், இற்றுப் போய்விட்டது!

"இங்கிலையில், தமிழ்நாட்டிலுள்ள காங்கிரசுக்காரர்கள், மக்களுடைய தீர்ப்புக்குப் பணிந்து ஐந்தாண்டுக் காலம் பொறுமையாகக் காத்துக்கொண்டிருக்க வேண்டும்.

"இருபதாண்டுக்காலக் காங்கிரசு ஆட்சியுடன், ஐந்தாண்டுக்கால தி. மு. க. ஆட்சியை ஒப்பிட்டுப் பார்த்துத் தீர்ப்புக் கூற மக்களுக்கு வாய்ப்பு அளிப்போம்!

"நாட்டிலுள்ள எல்லா எதிர்க் கட்சிகளும் கட்டுப்பாடாக ஒன்றுபட்டுப் பாடுபட்டால், மத்திய அரசிலுள்ள காங்கிரசு அமைச்சரவை, மூன்று மாதங்களுக்குமேல் நிலைத்து நிற்காது செய்ய முடியும்!"

---அறிஞர் அண்ணு

(திருச்சி பொதுக்கூட்டத்தில்)

மதுரை பாங்கி ஊழியர் சங்க 6-வது ஆண்டு மாநாடு

மதுரை பாங்கி ஊழியர் சங்க ஆருவது ஆண்டு மாநாடு 12—8—67 மாலை 5-30 மணிக்கு மதுரை இராதாகிருஷ்ணு திருமண மண்டபத்தில் நடைபெறும்; திரு. சி. எஸ். இராமசாமி தலைமைவகிப்பார்; திரு. என். சம்பத் திறந்து வைப்பார்; தோழர்கள் என். சங்கரையா எம்.எல்.ஏ., சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., பி. எஸ். இராமசுப்பிரமணியம் பி.ஏ.பி.எல். ஆகியோர் பேசுவர்.

சென்னைத் தீ விபத்துத் துயர் தணிப்புக் குழுவினர்

அளிக்கும்

திரைப் பட விழா

சென்னை பாலர் அரங்கில்

தினசரி 2 காட்சிகள் (மாலை 2-30 மணி—மாலை 6 மணி)

11--8--67 : 'அன்னை'

[6 மணிக் காட்சி மாண்புமிகு அமைச்சர் கே. ஏ. மதியழகன் தலைமையில் நடைபெறும்]

நுழைவுக் கட்டணம்: ரூ. 3, 2, 1; சீசன் டிக்கெட்: ரூ. 25

முந்திய அரசு செய்த தவறு!

இன்று பலர் உயிருக்கு ஆபத்தாய் முடிந்தது!

சென்னை, ஆக. 9—

"வார்னிஷ் குடித்ததால் சென்னையில் பல பேர் பாதிக்கப்பட்டு 50 பேருக்குமேல் இறந்தார்கள் என்ற செய்தியை நீங்கள் அறிவீர்கள்!

"இதுபோலவே—வார்னிஷ் குடித்த காரணத்தால் காஞ்சிபுரத்திலும், வாலாசாபாத்திலும், செங்கற்பட்டிலும் இருநூறு பேருக்குமேல் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிருர்கள்; அங்கும் பலர் மாண்டிருக்கின்றனர்!

"'புதிய அரசு, மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாக அமுல் நடத்தும்' என்று அறிஞர் அண்ணு அவர்கள் முன்பே அறிவித்திருக்கிருர்கள்!

"'கடந்த கால அரசு, வார்னிஷ் லைசென்சு தருவதில் கையாண்ட முறைகளை நாம் இப்போது வேதனையுடன் அனுபவிக்க வேண்டியிருக்கிறது' என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

"அந்த வார்னிஷ் எனும் பொருளில் எத்தகைய விஷச் சத்து கலந்திருந்தது என்பதைப்பற்றி ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது!

"ஆனுல், ஒன்று மட்டும் கூறிக்கொள்வேன்—சென்னைக் குடிசைப் பகுதிகளில் வாழும் நகரசுத்தித் தொழிலாளர்களும், மற்றவர்களும், ஆடி அமாவாசையன்று பரந்தாமன் செட்டியார் என்பவர் கடையிலிருந்து வார்னிஷ் வாங்கிச் சாப்பிட்டதால் இந்தப் பயங்கரச் சாவுகள் ஏற்பட்டன என்பதைப் பத்திரிகைகளில் நீங்கள் படித்திருப்பீர்கள்!

"'இந்தப் பரந்தாமன் செட்டியார், தமது கடைக் கணக்குகளைச் சரிவர—ஒழுங்காக வைக்கவில்லை; வார்னிஷ் பொருளைத் துர்விநியோகம் செய்தார்' என்பதற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டு 1963-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் தண்டிக்கப்பட்டிருக்கிருர்! 'அவரது லைசென்சை ரத்து செய்யவேண்டும்' என்று போலீசார் அப்போதே அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்திருக்கிருர்கள்! ஆனுல் என்ன காரணமோ—அப்போது இருந்த அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லை!

"இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் இந்த வேளையில்—பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் வழங்கிக்கொண்டிருக்கும் இந்த வேளையில்—நாம் ஒரு பாடத்தை மிகத் தெளிவாகக் கற்றுக்கொள்ளவேண்டும்.

"வார்னிஷ் குடித்த காரணத்தால் கணவனை இழந்த மனைவியும்—மனைவியை இழந்த கணவனும்—தாய் தந்தையரை இழந்த பிள்ளைகளும்—பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றேரும்—அனைவரையும் இழந்து நிற்கும் குடிசைகளையும் காணும்போது நெஞ்சம் பதைக்கிறது!

"பிறர் செய்த செயலால் அவர்கள் சாகவில்லை; தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டார்கள்—தங்களையும் அறியாமல்!

"'சாகவேண்டும்' என்ற நினைப்பில் அல்ல—'சந்தோஷமாக இருக்கவேண்டும்' என்ற ஆசையால், இப்படி வார்னிஷ் குடித்து மரணத்தைத் தழுவிக்கொண்டார்கள்!

"குடிப் பழக்கத்தை விடமுடியாமல் இப்படிப்பட்ட பொருட்களை உட்கொள்ளும் மக்களை—தொழிலாளத் தோழர்களை மிக்கப் பணிவுடன் கேட்டுக்கொள்வேன்—'இத்தகைய ஆபத்தான காரியங்களில் ஈடுபடுவதன்மூலம் சமுதாயத்திற்கும், தன்னை நம்பி வாழும் குடும்பத்திற்கும், வேதனையை -- தீங்கை இழைக்கிறீர்கள் என்பதை நெஞ்சத்தில் கொள்ளுங்கள்; நல்வழிக்கு வாருங்கள்'—என்று!"

---அமைச்சர் மு. கருணுநிதி

(சென்னை 4-வது வட்டம் கே. எஸ். பாண்டியன் நினைவு மன்ற ஆண்டு விழாக் கூட்டத்தில்)

நடக்க இருப்பவை

பொதுக் கூட்டங்கள்

11--8--67

சென்னை 100-வது வட்டம்

எம்.ஜி.ஆர். மன்றத் திறப்பு விழா; இரவு 7 மணிக்கு சைதை காரணீசுவரர் கோயில் தேரடியில்; தலைவர்: நாகசுந்தரம்; பேசுவோர்: அமைச்சர் மு. கருணுநிதி, எஸ். இராசகோபாலனந்தம், துரை. முருகன் பி.ஏ., சைதை சம்பந்தம் எம்.சி., ஆர். டி. பாஸ்கரன் எம்.சி., சோ. கி. மூர்த்தி, சி. பி. பவளவண்ணன், எம். குமார் மற்றும் பலர்.

பொன்னுவரை

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு; தலைவர்: வே. முருகேசன்; பேசுவோர்: க. முருகையன் எம்.எல்.ஏ., துரை. வையாபுரி. (கே. பி. யோகராசன், எம். எஸ். மல்லிகா கலை நிகழ்ச்சி நடைபெறும்),

பம்பாய் தி.மு.க. மத்தியக்குழுக்கூட்டம்

பம்பாய் தி.மு.க. மத்தியக் குழுக் கூட்டம் 13—8—67 பிற்பகல் 2 மணிக்கு விக்ரொலி 220/3117-ம் எண்ணுள்ள கட்டிடத்தில் நடைபெறும்; தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணு அவர்களின் பம்பாய் வருகை குறித்து முடிவெடுக்கப் பட வேண்டியிருப்பதால் கிளைக் கழகச் செயலாளர்களும், மத்தியக் குழு உறுப்பினர்களும் தவருது கலந்துகொள்ளுமாறு செயலாளர் தொ. து. அன்புச் செழியன் கேட்டுக்கொள்கிருர்.

வேதாரண்யத்தில் தீ விபத்து

தஞ்சாவூர், ஆக. 9—

வேதாரண்யத்தில் மீனவர் வசிக்கும் பகுதியில் நேற்றிரவு ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக 200 குடிசைகள் சாம்பலாயின.

தகவல் அறிந்ததும் திருவாரூரிலிருந்தும், மன்னர்குடியிலிருந்தும் தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயுடன் போராடி அணைத்தனர். விபத்துக்கான காரணம் தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணியில் ரெவினியூ துறை அதிகாரிகள் ஈடுபட்டிருப்பதாக மாவட்ட ரெவினியூ அதிகாரி தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.